TNTP010087722025

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்**
**திருச்சிராப்பள்ளி**

முன்னிலை : **திரு.S.கோபிநாதன், பி.எஸ்.சி, பி.எல்.,**
இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி

2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 15-ம் நாள் திங்கள்கிழமை
**அமர்வு வழக்கு எண்.576/2025**

**CNR.No. TNTP01-008772-2025**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் ஆய்வாளர்,<br>பொன்மலை காவல் நிலைய<br>குற்ற எண்.600/2024. |
| குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | | சுடலைமணி, த/பெ.நாராயண பெருமாள்,<br>எண்.5, தமிழர் தெரு,<br>மேலகல்கண்டார் கோட்டை, திருச்சி. |
| சம்பவ நாள் | | 19.11.2024 |
| புகார் நாள் | | 19.11.2024 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | | 19.11.2024 |
| எதிரிக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு பிரிவுகள் | : | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 123 of BNS Act r/w Section 24(1), 6(b) of COTPA Act கீழ் குற்றசாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் பதிலுரை | & | குற்றவாளி இல்லை |

| | | |
|---|---|---|
| தண்டனை அல்லது உத்தரவு | & | **முடிவாக,** அரசு தரப்பு எதிரி மீதான குற்றசாட்டுகளான சட்டப்பிரிவுகள் 123 of BNS Act r/w Section 24(1), 6(b) of COTPA Act–ன் கீழ் எதிரிக்கு எதிராக முற்றிலும் நிரூவிக்க தவறிவிட்டது என கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் முடிவு செய்து எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிடுகிறேன். |
| வழக்கு சொத்திற்கான உத்தரவு | | இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சா.பொ.1 வரிசை ஆன 1. HANS CHAP TOBACOO 300G X 150 POCKETS = 45 KGS, 2. Cool lips filter tobacoo 100.8g x 36 pockets = 3.6288kgs, 3. Vimal tobacoo 75g x 136 pockets = 10.200kgs, 4. V.tobacoo 300g x 121 pockets = 3.630 kgs புகையிலை பொருட்கள் ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து **15.06.2026** தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் **திரு.A.பாலசுப்பிரமணியன்,** அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.P.ஜான்** அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

இவ்வழக்கானது குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.5, திருச்சிராப்பள்ளி நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.346/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் மேல்விசாரணைக்காக திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, இவ்வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது.

**1. இவ்வழக்கின் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு : –**

அரசு தரப்பு வழக்கானது, இவ்வழக்கின் புகார்தாரர் உணவு பாதுகாப்பு அலுவலர் (பொறுப்பு) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, (590) மாநகராட்சி குறியீடு எண்.590 க்கு உணவு பாதுகாப்பு அலுவலரான (பொறுப்பு) அவர்கள் 19.11.2024 மாவட்ட நியமன அலுவலருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி அவருடன் பணிபுரியும் திரு.கந்தவேல் மற்றும் திரு. சையத் இப்ராஹீம் ஆகியோருடன் மேலகல்கண்டார் கோட்டை பகுதியில் தமிதழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போது இரவு 09.00 மணியளவில் மேலகல்கண்டார் கோட்டை பகுதியில் எதிரி அவர்களுக்கு சொந்தமான N.S.மளிகை கடையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மளிகை கடையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மளிகை கடையின் அருகில் பிரசத்தி பெற்ற செல்வ மாரியம்மன் கோவில் நகராட்சி அலுவலகம் பள்ளி கூடம் அமைந்திருக்கும் இடத்தில் பள்ளி மாணவர்கள் மற்றும் பக்தர்கள் அப்பகுதி இளைஞர்களுக்கு தமிழக அரசால்

தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்து வந்தும், பொது மக்களின் நலனில் அக்கரை இல்லாமல் லாப நோக்கத்துடன் அரசின் உத்தரவினை மதிக்காமல் செயல்படுத்தி எதிரி மளிகை கடை நடத்தி வருகிற பெயரில் மொத்தம் 64.945 கிலோ எடையுள்ள புகையிலை பொருட்களையும், விற்பனை செய்ய வைத்திருந்ததாகவும், எனவே எதிரியின் இச்செய்கையானது சட்டப்பிரிவுகள் 123 of BNS Act r/w 24(1), 6(b) of COTPA Act ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக எதிரி மீது பொன்மலை காவல் நிலைய ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளர்.

2. இந்த வழக்கானது முதலில் வழக்கு கோப்பானது முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.346/2025 ஆக குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, திருச்சிராப்பள்ளியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல் யாவும் கு.வி.மு.ச.207 ன்படி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 123 of BNS Act r/w 24(1), 6(b) of COTPA Act–ன் கீழான குற்றச்சாட்டு என்பதால், வழக்கு கோப்பினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டது. மேலும், இந்த வழக்கு கோப்பானது மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.576/2025 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர் கு.வி.மு.ச பிரிவு 226ன் கீழ் அரசு தரப்பில் வழக்கு சங்கதிகள் குறித்து அரசு தரப்பு

வழக்கறிஞர் இந்த வழக்கை திறந்து வைத்தார். இரு தரப்பும் கேட்கப்பட்டு, இந்த வழக்கில் எதிரிகக்கு எதிராக தகுந்த முகாந்திரம் இருப்பதால் BNSS பிரிவு 250 உ/இ பிரிவு 251 ன் படி எதிரி மீது சட்டப்பிரிவுகள் 123 of BNS Act r/w 24(1), 6(b) of COTPA Act ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

4. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின் எதிரியிடம் அரசு தரப்பு, குற்றம் பற்றி விளக்கி கேட்டபோது குற்றத்தை மறுத்தரைத்தார். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

5. அரசு தரப்பில் தனது வழக்கினை மெய்பிக்க வேண்டி **அ.சா.1 முதல் அ.சா.4** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், **அ.த.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்கள் மற்றும் **சா.பொ.1** குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் எதையும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>6. அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம்:</u>

6.1) அ.சா.1 மகாதேவன் உணவு பாதுகாப்பு அலுவலர் தனது சாட்சியத்தில், நான் கடந்த 19.11.2024-ம் தேதி திருச்சி மாவட்ட நியமன அலுவலருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் திருச்சி மாநகராட்சி பகுதி எண்.590 (FSO) மேலகல்கண்டார் கோட்டை பகுதியில் என்னுடன் பணியாற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சையது இப்ராஹிம் மற்றும் கந்தவேல் ஆகியோர்களுடன் அந்த பகுதியில் ஆய்வு மேற்கொண்டோம். அன்று இரவு 09.00 மணி அளவில் எண்.81, காமராஜர் ரோடு, மாநகராட்சி எதிரில் அமைந்துள்ள என்.எஸ் மளிகை கடைக்கு சென்றோம்.

அப்போது கடையில் பொறுப்பில் இருந்தவர்களிடம் உரிமையாளர் யார் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி என தெரியவந்தது. தமிழக அரசால் தடை செய்யப்பட்டுள்ள புகையிலை பொருட்கள் 64.945 கி.கி வைத்து பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரியவந்தது. நாங்கள் ஆய்வுக்காக 2.456 கி.கி எடுத்தது போக மீதி 62.459 கி.கி புகையிலை பொருட்களுடன் குற்றம் சாட்டப்பட்ட நபரான சுடலைமணி என்பவரை பொன்மலை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம்.

இது சம்பந்தமாக எழுத்து மூலமாக நான் புகார் கொடுத்தேன். அது **அ.த.சா.ஆ.1** ஆகும். நாங்கள் கைப்பற்றிய புகையிலை பொருட்கள் **சா.பொ.1**. மாதிரியை கோயமுத்தூர் எங்கள் துறை தடய ஆய்வுக்கு அனுப்பி வைத்தோம். என்னை போலீசார் விசாரித்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 கிருஷ்ணகுமார் தனது சாட்சியத்தில் நான் தற்போது மேலகல்கண்டார் கோட்டை ராமசாமி தெருவில் குடியிருந்து வருகிறேன் கடந்த 20.11.2024ம் தேதி மதியம் 01.00 மணிக்கு நான் சம்பவ இடத்தில் காவல் ஆய்வாளர் விசாரணை செய்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததற்கு சாட்சியாக இருந்தேன். மகஜரில் உள்ள என்னுடைய கையெழுத்து **அ.த.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 வினோத், காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் நான் தற்போது திருச்சி அமர்வு நீதிமன்ற காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த

19.11.2024-ம் தேதி பொன்மலை காவல் நிலையத்தில் நான் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது மகாதேவன் என்ற உணவு பாதுகாப்பு அதிகாரி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.600/2024-ன் கீழ் BNS 123 r/w 24(1), 6(d) COPTA சட்டத்தின் கீழ் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆகும். பின்பு மேல் விசாரணைக்காக ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன் என சாட்சியம் அளித்துள்ளார்.

6.4) அ.சா.4 திருவானந்தம், காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் நான் தற்போது கரூர் மாவட்டம், குளித்தலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.11.2024-ம் தேதி பொன்மலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல் சார்பு ஆய்வாளர் திரு.வினோத் என்பவர் பொன்மலை காவல் நிலைய குற்ற எண்.600/2024, சட்டப்பிரிவுகள் 123 பிஎன்எஸ் 24(1), 6(b) COTPA Act-ன் படி வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் மீராபாய் அவர்களால் புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரி சுடலைமணி த/பெ.நாராயண பெருமாள், எம்.கே.கோட்டை என்பவரை 19.11.2024-ம் தேதி 23.50 மணிக்கு கைது செய்து அவரிடம் இருந்து சாட்சிகள் கந்தவேல், சையது இப்ராஹிம் உணவு பாதுகாப்பு அதிகாரி ஆகியோர்கள் முன்னிலையில் புகார்தாரர் மகாதேவன் உணவு பாதுகாப்பு அலுவலர் திருச்சிராப்பள்ளி என்பவர் மூலம் 2486 கிராம் பகுப்பாய்வுக்கு எடுத்தது போக 62 கிலோ 459 கிராம் போதை பொருட்களை கைப்பற்றி புலன் விசாரணை மேற்கொண்டதை 22.11.2024-ம் தேதி மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

அன்றைய தினமே வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்திற்கு படிவம் 91-ன் மூலம் அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91

**அ.த.சா.ஆ.4** ஆகும். அன்றைய தினமே உணவு பாதுகாப்பு தடய ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கான அறிக்கைகள் நகல்கள் **அ.த.சா.ஆ.5, 6** ஆகும். பின்பு அன்றைய தினமே வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளர் வினோத் அவர்களையும் விசாரித்தேன். சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.7**, மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.8** ஆகும். பின்பு எனது புலன் விசாரணை முடித்து 29.11.2024-ம் தேதி எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்து கொள்ளப்பட்டது.

7) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி வினவியபோது அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான குற்றசாட்டு எல்லாவித நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதுதான்.

9) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**<u>தீர்வு:-</u>**

இந்த வழக்கில் அரசு தரப்பில் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன.

அ.சா.4 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி. இவர் எதிரியை கைது செய்தது குறித்தும், எதிரியிடமிருந்து புகையிலை பொருட்களை கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

புகையிலை பொருட்கள் எங்கிருந்து வந்தது என்பது பற்றி விசாரணை எதுவும் செய்யப்படவில்லை. கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்களை தடய ஆய்வுக்கு உட்படுத்தி அது போதை பொருளை சார்ந்தது என்பது பற்றி விசாரணை செய்யப்படவில்லை. இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை சான்ரூட்டும்படி எந்த சாட்சியமும் சாட்சியம் அளிக்கவில்லை. இந்த வழக்கில் புகார் கொடுத்தவர் ஒரு உணவு பாதுகாப்பு அலுவலர். அவர் உணவு பாதுகாப்பு சட்டத்தின் படி ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சரியான காரணம் சொல்லவில்லை. புகாரில் சொல்லப்பட்ட நேரம் திருத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடய பொருட்கள் சரியான நேரத்தில் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. புலன் விசாரணை ஆவணம் காலதாமதமாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**முடிவாக**, அரசு தரப்பு எதிரி மீதான குற்றசாட்டுகளான சட்டப்பிரிவுகள் 123 of BNS Act r/w 24(1), 6(b) of COTPA Act–ன் எதிரிக்கு எதிராக முற்றிலும் நிரூபிக்க தவறிவிட்டது என கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் முடிவு செய்து எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிடுகிறேன்.

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சா.பொ.1 வரிசை ஆன 1. HANS CHAP TOBACOO 300G X 150 POCKETS = 45 KGS, 2. Cool lips filter tobacoo 100.8g x 36 pockets = 3.6288kgs, 3. Vimal tobacoo 75g x 136 pockets = 10.200kgs, 4. V.tobacoo 300g x 121 pockets = 3.630 kgs புகையிலை பொருட்கள் ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரிடையாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் **2026–ம் வருடம் ஜூன் மாதம் 15–ம்** நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி
தேதி : 15.06.2026

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | மகாதேவன், உணவு பாதுகாப்பு அதிகாரி |
| அ.சா.2 | கிருஷ்ணகுமார் |
| அ.சா.3 | வினோத், காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.4 | திருவானந்தம், காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

Judicial Form No.68

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | – | புகார் |
| அ.த.சா.ஆ.2 | – | மகஜரில் உள்ள கையெழுத்து |
| அ.த.சா.ஆ.3 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 | – | மருத்துவ அறிக்கை நகல் |
| அ.த.சா.ஆ.5 | – | மருத்துவ அறிக்கை நகல் |
| அ.த.சா.ஆ.6 | – | படிவம் 91 |
| அ.த.சா.ஆ.7 | – | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.8 | – | மாதிரி வரைபடம் |

**சான்று பொருட்கள் :–**

| | | |
|---|---|---|
| சா.பொ.1 வரிசை | – | 1. Hans Chap Tobacoo 300g x 150 pockets = 45 kgs<br>2. Cool lips filter tobacoo 100.8g x 36 pockets = 3.6288kgs<br>3. Vimal tobacoo 75g x 136 pockets = 10.200kgs<br>4. V.tobacoo 300g x 121 pockets = 3.630 kgs<br>புகையிலை பொருட்கள் |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி : 15.06.2026